ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2447/27 - 2025 ජූලි මස 30 වැනි බදාදා - 2025.07.30

2447/27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 856-3/2/3/10/275.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2021/HW/360.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 328, பத்தலகெதர கிராம அலுவலர் பிரிவில் உள்ள பத்தலகெதர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் அதிபதி சார்பாக கம்பஹா மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. க.வ.510614, தொகுதி இல. 02, தாள் இல. 7 கொண்டதுமான 0.0445 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டுகள் (04) விஸ்தரிப் பதற்காக எடுக்கப்படுகின்றது:

01. **துண்டு இல. 18**
காணியின் பெயர்: தொடன்கஹலன்தகும்புர; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ராஜகருணா லியன அத்துகோர லலாகே கசுன் மதுஷங்க ராஜகருணா, இல. 79, தம்மானந்த மாவத்தை, பத்தலகெதர, வேயன்கொடை, (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0191 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 19**
காணியின் பெயர்: - ; விபரம்: கால்வாய்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: (மத்திய அதிவேக வீதிக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0013 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 22**
காணியின் பெயர்: பன்விலகும்புர; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: விஜலத் பத்திரன்னெஹெலாகே சந்திர


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

லத்தா, இல. 62, வட்ட பாதை, பத்தலகெதர, வேயன்கொடை, (காணி எடுத்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0163 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 23**

காணியின் பெயர்: கிடகும்புர; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ராஜகருணா லியன அத்துகோரலலாகே நிமல் குமார, இல. 179, தம்மானந்த மாவத்தை, பத்தலகெதர, வேயன்கொடை, (காணி எடுத்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0078 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அத்தனகல்லை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். பி. குணவர்தன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
அத்தனகல்லை.

பிரதேச செயலகம்,
அத்தனகல்லை,
2025, யூலை 28.

EOG 07 - 0361